**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 20.07.2026

Case No.Spl.C.4/2025

PW.40

**திரு.பெருமாள்சாமி**

A1 present. A2 absent. Petition u/s.355 BNSS is filed and allowed.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

இவ்வழக்கில் மேல்விசாரணையைத் தொடர்ந்து 06.03.2003 தேதியில் சாட்சி M.B.பால் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.03.2003 ல் சாட்சி R,சஜித்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.03.2003 ல் சாட்சிகள் பென்சிகர் மற்றும் ஜோஸி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.03.2003 ல் சாட்சி S.பாஸ்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.03.2003 ல் திருநெல்வேலி SG.ஜெயராஜ் நாடார் நிறுவன மேலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் டிராக்டர் TN69A 9848 என்ற வாகனத்தின் Invoice–ன் சான்றிட்ட புகைப்பட நகலை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டேன். 19.03.2003 ல் தூத்துக்குடி DRDA, Project Officer க்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் பாரதி ரூரல் சர்வீஸ் டிரஸ்ட் என்ற நிறுவனம் சம்பந்தப்பட்ட கோப்பை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதே தினத்தில் தூத்துக்குடி மாவட்ட வன அலுவலர் என்பவருக்கும், தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குநருக்கும் கடிதங்கள் அனுப்பி அதில் 3 மாத வயதுடைய மரக்கன்றுகளை 1995–1996 ம் ஆண்டின் பாபுல் முந்திரி மரக்கன்றுகளின் Schedule of Rates கேட்டு கடிதம் அனுப்பினேன். 20.03.2003 ல் சாட்சிகள் பிரான்சிஸ், அமல்ஜார்ஜ் மற்றும் காந்தி என்ற தூத்துக்குடி கீழுர் சார்பதிவாளரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காந்தி என்னுடைய விசாரணையின் போது அவருடைய அலுவலகத்தின் பக்கம் 4 பத்திர எண்38/95–ன் சான்றிட்ட நகலை கொடுத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த ஆவணம் அ.சா.ஆ.88 ஆகும். முதல் விசாரணை அதிகாரி திரு.சண்முகநாதன் இவ்வழக்கில் 01.01.1992 முதல் 31.12.2000 வரைக்கான காலத்தை Check Period ஆக எடுத்திருந்தார். நான் இவ்வழக்கில் 1 ம் எதிரி சொத்து சேர்த்த

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.20 16:49:46 +0530

காலத்தை கருத்தில் கொண்டு செக் பீரியடை 01.07.1992 முதல் 31.03.1997 ஆக மாற்றம் செய்தேன். இவ்வழக்கில் திருத்தப்பட்ட சான்றுகளை ஆய்வு செய்து 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி, 1ம் எதிரியின் தகப்பனார் இசிடோ நல்லையா என்பவர்கள் 1ம் எதிரிக்காக சேர்த்த சொத்துக்கள் சம்பந்தமான விபரங்கள் செக் பீரியடில் 1ம் எதிரி மற்றும் அவரது மனைவி, அவரது தகப்பனார் இசிடோ நல்லையா ஆகியோர் பெற்ற சட்டப்படியான Prosecution தரப்பிற்கு தெரிந்த வருமானத்தை கணக்கில் எடுத்தோம். செக் பீரியடில் அவர்கள் செய்த செலவுகளையும் கணக்கிட்டோம். மொத்தம் 7 அட்டவணைகளாக தயார் செய்து அந்த அட்டவணைகளை 06.09.2003ல் 1ம் எதிரிக்கு கடிதம் அனுப்பி ஒப்புதல் பெற்றேன். நான் அனுப்பிய கடிதத்தின்படி, 31.03.1997ல் 1ம் எதிரி தன் பெயரிலும், தன் மனைவி 2ம் எதிரியின் பெயரிலும், இறந்து போன அவரது தகப்பனார் இசிடோ நல்லையா பெயரிலும், வருமானத்திற்கு அதிகமான சொத்தாக ரூ.15,82,964/- வைத்திருந்தார் என்று தெரிவித்திருந்தேன். இந்த கடிதத்திற்கு விளக்கம் அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர் 11.07.2003ல் கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். அதன் பின்னர் 28.09.2003 நாளிட்ட ஒரு விளக்கத்தை எனக்கு அனுப்பியிருந்தார். அந்த விளக்கத்தை நான் ஆய்வு செய்ததில் வருமானத்திற்கு அதிகமாக சேர்த்த சொத்துக்கு சட்டப்படியான தேர்ந்த முறையான வருமானங்களைக் கொண்டு சேர்த்ததாக சொன்னது ஏற்றுக் கொள்ளும்படியான விளக்கமில்லை. அந்த கடிதம் மற்றும் பதில் அடங்கியது அ.சா.ஆ.89 ஆகும். 31.03.1997 அன்று 1ம் எதிரி வருமானத்திற்கு அதிகமாக ரூ.15,82,964/- வைத்திருந்ததாகவும், 2ம் எதிரி, 1ம் எதிரியின் தகப்பனார் இறந்து போன இசிடோ நல்லையா ஆகியோர் மேலே சொன்ன 1ம் எதிரி செய்த குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததாகவும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். 10.09.2008ல் நான் தாக்கல் செய்த குற்ற பத்திரிகையில் 1ம் எதிரி ஊழல் தடுப்பு சட்டம் 1998 பிரிவு 13(2) உ/இ 13(1)(e) பிரிவின் படியும், 2ம்எதிரி மீது ஊழல் தடுப்பு சட்டம் பிரிவு 13(2) உ/இ 13(1)(e) r/w 109 இதச பிரிவின்படி குற்றம் இழைத்திருந்ததாக தாக்கல் செய்திருக்கிறேன். என் புலன்விசாரணையின் போது, 1ம் எதிரியை 13.02.2003ல் குவிமுச 161ன்படி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2ம் எதிரியை 24.02.2003ல் குவிமுச 161ன்படி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.20 16:49:52 +0530

என் விசாரணையின் போது, சாட்சி ஜஸ்டின் என்பவரை விசாரித்திருந்தேன். என் விசாரணையில், TN 69 A 2700 என்ற அம்பாஸிடர் காரை 1999, 2000 ம் வாக்கில் தான் தலையிட்டு விற்றுக் கொடுத்ததாக சொல்லியிருந்தார்.

இளம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய இயலாது என தெரிவித்ததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.07.20 16:49:57 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**